ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் காற்றாலைமூலம் இரவு நேரங்களில் பெறப்படும் அதிக அளவு மின்சாரத்தை, தற்போது பயன்படுத்த எனது தலைமையிலான அரசு ஒரு செயல் திட்டத்தை வகுத்துள்ளது. இதன்படி, காற்றாலைமூலம் இரவு நேரங்களில் பெறப்படும் சுமார் 100 மெகா வாட் மின்சாரம், உயரழுத்தத் தொழிற்சாலைகளுக்கு இரவு 10 மணி முதல் காலை 5 மணி வரை 20 விழுக்காடு மின் தடையை விலக்கிக் கொண்டு வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) காற்றாலைமூலம் இவ்வாறு பெறப்படும் மின்சாரம் முழுவதும் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதால், தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் இந்த மின்சாரத்தைப் பயன்படுத்திக் கொள்ள இசைவு தெரிவிப்பவர்களுக்கு இது வழங்கப்படும்.

இந்தச் செயல்திட்டம் இன்று, அதாவது 8-8-2011 முதல் நடைமுறைப்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் உயரழுத்தத் தொழிற்சாலைகளுக்கு சுமார் 100 மெகா வாட் அளவுக்கு நிவாரணம் கிடைப்பதுடன், காற்றாலைமூலம் மின் உற்பத்தி செய்பவர்கள் அந்த மின்சாரத்தை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு விற்பதன்மூலம் பயன்பெறுவர். மேலும், தமிழ்நாடு மின்சார வாரியம், மின் தேவை மற்றும் மின் பயனீட்டு அளவுக் கட்டணமாகச் சுமார் 10 கோடி ரூபாய் வருவாய் ஈட்டும் என்பதையும் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-00

4. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 2011

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

5. திருத்திய வரவு–செலவுத் திட்டம், 2011–2012, பொது விவாதம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2011-2012 ஆம் ஆண்டுக்கான திருத்திய நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.*

***திரு. வி.சி. சந்திரகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது என்னை உரையாற்ற வைத்து அழகு பார்க்கும் என் இதய தெய்வம், தமிழகச் சட்டமன்றப் பேரவையின் எதிர்க்கட்சித் தலைவர், தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் தலைவர். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், இது நிதிநிலை அறிக்கையின்மீதான விவாதம். ஆளுநர் உரையின்மீதான விவாதம் அல்ல.*